தினமலர்
சென்னை | செவ்வாய் | 23.4.2019

# புதிய மருந்துகளை கண்டுபிடிக்க வேண்டும்

## மருத்துவ மாணவர்களுக்கு வேண்டுகோள்

போரூர், ஏப். 23–

''இந்தியாவில், இன்னும் அடிப்படை மருந்துகள் மட்டுமே தயாரிக்கப்படுகிறது. காசநோய், மலேரியா, எச்.ஐ.வி., போன்ற நோய்களுக்கு, புதிய மருந்துகளை, நாம் கண்டுபிடிக்க வேண்டும்,'' என, இந்திய மருந்துகள் கண்காணிப்பு ஜெனரல், டாக்டர் ஈஸ்வரரெட்டி கூறினார்.

போரூர், ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவன, 29வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இதில், ராமச்சந்திரா பல்கலைக்கழக வேந்தர், வெங்கடாசலம் தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற, இந்திய மருந்துகள் கண்காணிப்பு ஜெனரல், ஈஸ்வரரெட்டி, மாணவ – மாணவியருக்கு பட்டங்கள் வழங்கி பேசியதாவது:

வலைதளம் மூலம் மருந்துகள் விற்கப்படுவதை ஒழுங்குப்படுத்த, அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தியாவில் இன்னும், அடிப்படை மருந்துகள் மட்டுமே தயாரிக்கப்படுகின்றன.

நாம் ஆய்வுகள் மற்றும் புதிய மருந்துகளை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, நாட்டில் அதிகமாக காணப்படும், காசநோய், எச்.ஐ.வி., மற்றும் மலேரியா போன்ற நோய்களுக்கு, மருந்துகளை கண்டுபிடிக்க வேண்டும்.

மருத்துவ மாணவர்கள், அறிவு, செயல்திறன் மற்றும் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டால், சமுதாயம் பிரகாசமாக இருக்கும்.

இவ்வாறு, அவர் பேசினார்.

விழாவில், 452 மாணவ – மாணவியருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

ராமச்சந்திரா பல்கலைக்கழக இணை வேந்தர், செங்குட்டுவன், துணை வேந்தர், விஜயராகவன் உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.



ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவன, 29வது பட்டமளிப்பு விழாவில், சிறப்பு விருந்தினராக பங்கேற்ற, இந்திய மருந்துகள் கண்காணிப்பு ஜெனரல், டாக்டர் ஈஸ்வரரெட்டி, மாணவ – மாணவியருக்கு பட்டங்களை வழங்கினார். உடன், ராமச்சந்திரா பல்கலை கழக வேந்தர், வெங்கடாசலம். இடம்: போரூர்.